## திருஞானசம்பந்தர்-வரலாறு

சைவநெறி தழைத்தோங்க பாடுபட்டவர்களில் தேவார மூவரின் பங்களிப்பு பெரிதாகும்.

இவர்கள் தந்த பண்சுமந்த பாடல்கள் தோத்திரப் பாக்களாக உள்ளன. இவர்கள் பாடிய

தலங்கள் திருமுறைத் தலங்கள் என்று அழைக்கப்படுகின்றன. தேவார மூவர் திருஞானசம்பந்தர்,

திருநாவுக்கரசர், சுந்தரர் அழைக்கப்படுகின்றனர். தேவார மூவரில் இளம் வயதிலேயே

தெய்வ அருள் பெற்று பாடல்களை இயற்றியவராகத் திருஞானசம்பந்தர் விளங்குகிறார்.

பிறப்பு:சோழ நாட்டில் பிரமபுரம், வேணுபுரம், காழி என்ற பன்னிரண்டு பெயர்களை உடைய
சீர்காழியில் சிவபாத இருதயாருக்கும், பகவதியம்மாளுக்கும் மகனாக
கி.பி. 637 ஆம் ஆண்டு சம்பந்தர் பிறந்தார்.

## திருவெண்காடு- தல வரலாறு

| | |
|---|---|
| இறைவர் திருப்பெயர்: | **வேதாரண்யேஸ்வரர், வெண்காட்டு நாதர்.** |
| இறைவியார் திருப்பெயர்: | **பிரமவித்யாநாயகி.** |
| தல மரம்: | ஆல், கொன்றை, வில்வம்,அரசு |
| தீர்த்தம் : | **முக்குளம் சூரிய), சந்திர, அக்கினி தீர்த்தங்கள்; முதலில் அக்கினி, பிறகு சூரிய இறுதியாக சந்திர தீர்த்தம் என்றமுறையில் நீராடுவர்(.** |
| வழிபட்டோர்: | **பிரம்மன், இந்திரன், வெள்ளையானை முதலியோர்.** |

- இங்கு வழிபட்ட பிரமனுக்கு அம்பாள் வித்தையை உபதேசித்தாள்; ஆதலின்

- அம்பாளுக்கு பிரமவித்யாம்பிகை என்று பெயர் வந்தது.
    - தேவேந்திரன், ஐராவதம்  என்கிற வெள்ளை யானை, மஹாவிஷ்ணு,
    - சூரியன், சந்திரன்,அக்னி , ச்வேத கேது, சுவேதன்  ஆகியோர் பூஜித்துள்ளனர்.
- உத்தாலக முனிவரின்  எட்டு வயது குமாரனான ச்வேதகேதுவின் உயிரைப்
- பறிக்கவேண்டி யமன் பாசக் கயிற்றை வீசியபோது  சுவாமி வெளிப்பட்டுக்
- கால  சம்ஹாரம் செய்ததாக -ஸ்தலபுராணம் சொல்கிறது.
    - சலந்தரன் மகன் மருத்துவன்; இறைவனை நோக்கித் தவம் செய்தான்,
    - இறைவன் காட்சி கொடுத்து சூலத்தைத் தந்து அதை நல்ல முறையில்
    - பயன்படுத்திக்கொள்ளுமாறு அறியுறுத்தி அருள் செய்தார். ஆனால் மருத்துவனோ
    - அதைத் தேவர்கள் தவம் செய்யவொட்டாதவாறு துன்புறுத்தப் பயன்படுத்தினான்.
    - அறிந்த இறைவன் சினந்து நந்தியை அனுப்பினார்; மருத்துவன் மாயச் சூலத்தை
    - அவர்மீது ஏவ, அச்சூலம் நந்தியின் உடலை ஒன்பது இடங்களில் துளைத்துவிட்டுப்
    - போயிற்று. இஃதறிந்த இறைவன் தாமே அகோரமூர்த்தியாக (இத்தலத்தில் சிறப்பு
    - மூர்த்தியாக அகோரமூர்த்தியே உள்ளார்.) வடிவுகொண்டு வந்து அவனை அழித்தார்
    - என்பது வரலாறு. அவ்வாறு அழித்த (மாசி மகத்து மறுநாள்) நாள் ஞாயிற்றுக்கிழமை

பூர நட்சத்திரம். இவ்வரலாற்றையொட்டிச் சுவாமிக்கு எதிரில் வெளியே உள்ள நந்தியின்

உடம்பில் ஒன்பது துவாரங்கள் இருப்பதை இன்றும் காணலாம்.

- வெளிப்ராகாரத்தில் வடமேற்கு மூலையில், தனி உள் ப்ராகாரத்துடன்
- பிரம்மவித்யாம்பிகையின் சன்னதி கிழக்கு நோக்கு அமைந்துள்ளது.
- பிரமனுக்குவித்தையை உபதேசித்ததால் இப்பெயர் வந்தது. திருநாங்கூரில்
- மதங்க முனிவரின் புதல்வியாகத் தோன்றிய அம்பிகை, தவம்
- செய்து. ஈச்வரனைத் திருவெண்காட்டில்
- மணந்து கொண்டதாகப் பாத்ம புராணம் கூறுகிறது. பின் இரு கரங்களில்
- தாமரையும்,
- அக்ஷ மாலையும் ஏந்தி, முன்னிருகரங்கள் அபய வரதமாகக்
- அருட்காட்சி வழங்குகிறாள் அம்பிகை.

## இரண்டாம் திருமுறை - தேவாரப் பதிகங்கள் -திருவெண்காடு

**பண் - சீகாமரம்** இத்தலம் சோழநாட்டிலுள்ளது.
**சுவாமிபெயர் - சுவேதாரணியேசுவரர்.தேவியார் - பிரமவித்தியாநாயகியம்மை.**

**1. கண்காட்டு நுதலானுங்
கனல்காட்டுங் கையானும்
பெண்காட்டு முருவானும்
பிறைகாட்டுஞ் சடையானும்
பண்காட்டு மிசையானும்
பயிர்காட்டும் புயலானும்
வெண்காட்டி லுறைவானும்
விடைகாட்டுங் கொடியானே.**

வெண்காட்டில் உறையும் பெருமான், நுதலிடைக் கண் கொண்டவன்; கையில் கனல் ஏந்தியவன்;
உமையம்மையை ஒரு கூறாகக் கொண்ட திருமேனியன் பிறையணிந்த சடைமுடியினன்;

பண்ணில் இறைவடிவானவன்; பயிரை வளர்க்கும் மேகமானவன்; விடைஏந்திய கொடியை உடையவன்.

**2. பேயடையா பிரிவெய்தும்**
**பிள்ளையினோ டுள்ளநினை**
**வாயினவே வரம்பெறுவ**
**ரயுறவேண் டாவொன்றும்**
**பயனதோ ளுமைபங்கன்**
**வெண்காட்டு முக்குளநீர்**
**தோய்வினையா ரவர்தம்மைத்**
**ராயாவாந் தீவினையே.**

மூங்கில் போன்ற திரண்ட தோளினை உடைய உமையம்மை பங்கன் எழுந்தருளிய திருவெண்காட்டை அடைந்து அங்குள்ள முக்குளநீரில் மூழ்கி எழுந்து வழிபடுவாரைப் பேய்கள் சாரமாட்டா. பேய் பிடித்திருந்தாலும் விலகும். மகப்பேறு வாய்க்கும். மனவிருப்பங்கள் ஈடேறுவதை இறைவர்பால் அவர் பெறுவர். சிறிதும் சந்தேகம் வேண்டா.

**ரனல்காலோ**
**மதியிரவி**
**ில்வரு மியமான**
**ம மெண்டிசையும்**
**னினொடாண் பெருமையொடு**
**யுமாம் பேராளன்**
**ணவர்கோன் வழிபடவெண்**
**ா விரும்பினனே.**

மண், நீர், அனல், காற்று, ஆகாயம், மதி, இரவி, எண்ணற்றனவாயுள்ள உயிர்கள் ஆகிய எட்டு மூர்த்தங்களுடன் இம்மை, மறுமை, எண்திசை, பெண், ஆண் ஆகியனவாகவும் பெரியதில் பெருமை, சிறியதில் சிறுமை ஆகியனவாகவும் விளங்கும்
புகாளனாகிய சிவபிரான், இந்திரன் வழிபடத்திருவெண்காட்டைத் தனது இருப்பிடமாகக்கி கொண்டு எழுந்தருளியுள்ளான்.

**ட மிடற்றண்ணல்**
**பண்காட்டின் றண்புறவின்**
**ல்விண்ட முடத்தாழை**
**லர் நிழலைக் குருகென்று**
**மண்டு துறைக்கெண்டை**
**மரையின் பூமறையக்**
**ல்விண்ட கதிர்முத்தம்**
**கைகாட்டுங் காட்சியதே.**

நஞ்சுண்ட கண்டனாகிய சிவபிரான் எழுந்தருளிய வெண்காட்டை அடுத்துள்ள தண்காட்டில் மடல்விரிந்த வளைந்த தாழைமலர் நிழலைக் குருகு என்றெண்ணி

நீர்நிலையில் வாழும் கெண்டைமீன்கள் தாமரைப்பூவின் அடியில் மறைய அதனைக்கண்ட கடல்முத்துக்கள் நகைப்பது போல ஒளி விடும் காட்சியால் புலப்படுகிறது.

**மலி தண்கானல்**
**வண்காட்டான் றிருவடிக்கீழ்**
**ாலைமலி வண்சாந்தால்**
**ழிபடுநன் மறையவன்றன்**
**மலடர்வெங் காலனுயிர்**
**ிண்டபினை நமன் றூதர்**
**ூலமிடற் றானடியா**
**ரன்றடர வஞ்சுவரே.**

கடல்நீர் நிரம்பிய குளிர்ந்த சோலைகள் சூழ்ந்த வெண்காட்டு இறைவன் திருவடிகளை
மாலைகளாலும் நிறைந்த வளமையான சந்தனத்தாலும் வழிபட்ட மறையவராகிய சுவேதகேதுவின் உயிரைக் கவரவந்த இயமனை அச்சிவன் உதைத்து அழித்ததால் அந்த
இயமனுடைய தூதர்கள் சிவபிரான் அடியவர் என்றால் அஞ்சி விலகுவர்.

**தண்மதியும் வெய்யரவுந்**
**தாங்கினான் சடையினுடன்**
**ஒண்மதிய நுதலுமையோர்**
**கூறுகந்தா னுறைகோயில்**
**பண்மொழியால் அவன்நாமம்**
**பலவோதப் பசுங்கிள்ளை**
**வெண்முகில்சேர் கரும்பெணைமேல்**
**வீற்றிருக்கும் வெண்காடே.**

தனது சடைமுடியோடு தண்மதியையும் வெய்ய அரவையும் தாங்கியவனும் ஒளி பொருந்திய மதி போன்ற நுதலை உடைய உமையம்மையை ஒருபாகமாகக் கொண்டவனும் ஆகிய சிவபிரான், உறையும் கோயில், பசிய கிளிகள் இனிய குரலால் இறைவன் திருப்பெயர்களை ஓதிக் கொண்டு வெண்முகில் சேரும் உயரிய கரியபனை மீது வீற்றிருக்கும் வெண்காடாகும்.

**மாற் கீந்தானுஞ்**
**சலந்தரனைப் பிளந்தானும்**
**அக்கரைமே லசைத்தானும்**
**அடைந்தயிரா வதம்பணிய**
**மிக்கதனுக் கருள்சுரக்கும்**
**வெண்காடும் வினைதுரக்கும்**
**முக்குளநன் குடையானு**
**முக்கணுடை யிறைவனே.**

திருமாலுக்குச் சக்கராயுதம் அளித்தவனும், சலந்தராசுரனைப் பிளந்து

அழித்தவனும், இடையில் எலும்புமாலை
அணிந்துள்ளவனும், தன்னை அடைந்து ஐராவதம் பணிய அதற்கு
மிகுதியான அருளைச் சுரப்பவ
னும், வினைகளைப் போக்கும் முக்குளங்களை உடையவனும் திருவெண்காட்டில்
எழுந்தருளிய முக்கண்ணனாகிய இறையவனே ஆவான்.

மொய்த்த வின்மொழியாள்
பயமெய்த்த மலையெடுத்த
உன்மத்த னுரநெரித்தன் றருள்செய்தா
னுறைகோயில்
கண்மொய்த்த கருமஞ்ஞை நடமாடக்
கடன் முழங்க
விண்மொய்த்த பொழில்வரிவண்
டிசைமுரலும் வெண்காடே.

பண்ணிசை போலும் இனிய மொழியினளாகிய பார்வதிதேவி அஞ்சுமாறு கயிலை
மலையைப் பெயர்த்தெடுத்த பித்தனாகிய இராவணனின் மார்பை
நெரித்துப்பின் அருள் செய்த சிவபிரான் உறையும் கோயில், கண்கள்
பொருந்திய தோகையைக் கொண்ட நீலமயில்கள் நடனமாடவும், கடல்
முழங்கவும், வானளாவிய பொழிலில் வரிவண்டுகள் இசைபாடவும் விளங்கும்
திருவெண்காடாகும்.

ார்செங் கமலத்தான்
கடற்கிடந்தா னெனவிவர்கள்
ஒள்ளாண்மை கொளற்கோடி
யுயர்ந்தாழ்ந்து முணர்வரியான்
வெள்ளானை தவஞ்செய்யு
மேதகுவெண் காட்டானென்
றுள்ளாடி யுருகாதா
ருணர்வுடைமை யுணரோமே.

தேன் பொருந்திய செந்தாமரையில் எழுந்தருளிய நான்முகன் கடலிடைத் துயிலும்
திருமால் ஆகியோர் தன்முனைப்பு நீங்கிச் சிறந்த அடியவர் ஆதற் பொருட்டு
மிக உயர்ந்தும் ஆழ்ந்தும் அவர்கள் உணர்தற்கு அரியவனாகிய சிவபிரான்
வெள்ளானை தவஞ் செய்து வழிபடும் நிலையில் சிறந்த
திருவெண்காட்டில் எழுந்தருளியுள்ளான் என்று மனங்கசிந்து
உருகாதவரின் ஞானத்தை மதியோம்.

போதியர்கள் பிண்டியர்கள்
மிண்டுமொழி பொருளென்னும்
பேதையர்க ளவர்பிறிமின்
அறிவுடையீ ரிதுகேண்மின்
வேதியர்கள் விரும்பியசீர்

**வியன்றிருவெண் காட்டானென்**
**றோதியவர் யாதுமொரு**
**தீதிலரென் றுணருமினே.**

போதிமரத்தின் அடியில் தவம் செய்யும் புத்தர்கள், அசோக மரநிழலில் தவம் செய்யும் சமணர்கள் கூறும் வன்பு
ரை களைப்பொருளாகக் கருதும் பேதையர்களைப் பிரிவீர்களாக. அறிவுடையவரே! இதனைக் கேளுங்கள். வேதியர்கள் விரும்பும் புகழுடைய பெரிய திருவெண்காட்டில் உறையும் ஈசன் பெயர்களை ஓதியவர் ஒரு தீங்கும் இலராவர் என்று உணருமின்.

**ண்பொழில்சூழ் சண்பையர்கோன்**
**றமிழ்ஞான சம்பந்தன்**
**விண்பொலிவெண் பிறைச்சென்னி**
**விகிர்தனுறைவெண்காட்டைப்**
**பண்பொலிசெந் தமிழ்மாலை**
**பாடியபத் திவைவல்லார்**
**மண்பொலிய வாழ்ந்தவர்போய்**
**வான் பொலியப் புகுவாரே.**

குளிர்ந்த பொழிலால் சூழப்பட்ட சண்பை நகர்த் தலைவனாகிய த
மிழ்ஞானசம்பந்தன், விண்ணிற் பொலியும் பிறை மதி சேர்ந்த சென்னியினை உடைய விகிர்தன் உறையும் திருவெண்காட்டைப் பண்ணிசை பொலியப்பாடிய இச்செந்தமிழ் மாலைபத்தையும் வல்லவர்,
மண்பொலிய வழ்வதோடு வான்பொலியவும் சென்று வாழ்வர்.

திருச்சிற்றம்பலம்

## திருநாவுக்கரசர் வரலாறு

### 3.3 திருநாவுக்கரசர் E

ாவுக்கரசர். இவர் திருமுனைப்பாடி நாட்டில் உள்ள
குலத்தில் குறுக்கையர் குடியில் வந்த புகழனார்
வாகத் திலகவதியாருக்குப்
நீக்கியார். சமணசமயத்தில் தலைமை
என்ற பெயர். திருவதிகையில் சிவபெருமான்
ானசம்பந்தர் முறையிட்டு அழைத்தது அப்பர் என்பது.

சமணம் சென்று சைவம் மீண்ட போது திருநாவுக்கரசர் பாடிய முதல் திருப்பதிகம் ‘கூற்றாயினவாறு’ என்று தொடங்குவது.

# திருஜயாறு கோயில் (திருவையாறு) தலவரலாறு

| | |
|---|---|
| இறைவர் திருப்பெயர்: | **பஞ்சநதீஸ்வரர், ஐயாற்றீசர், செம்பொற்சோதீஸ்வரர், பிரணதார்த்திஹரன்.** |
| இறைவியார் திருப்பெயர்: | **அறம்வளர்த்த நாயகி, தர்மசம்வர்த்தினி.** |
| தல மரம்: | வில்வம் |
| தீர்த்தம் : | **சூரியபுட்கரணி, காவிரி.** |

**திருநந்தி தேவர், இலக்குமி, இந்திரன், வருணண், வாலி,**

**சேரமான் பெருமாள், ஐயடிகள் காடவர்கோன், பட்டினத்துப்**

**பிள்ளையார், அருணகிரிநாதர்.**

நான்காம் திருமுறை - தேவாரப் பதிகங்கள் -திருவையாறு

**திருவையாறு**

**பண் - காந்தாரம்**

இத்தலம் சோழநாட்டிலுள்ளது.

**சுவாமிபெயர் - செம்பொன்சோதீசுரர்.**
**தேவியார் - அறம்வளர்த்தநாயகியம்மை.**

இது இந்தத்தலத்திலிருக்கும் ஆலயமே, கயிலாசமாகச் சுவாமி

தரிசனங்கட்டளையிட்டபோது ஓதியருளிய பதிகம்.

**1.மாதர்ப் பிறைக்கண்ணி யானை மலையான் மகளொடும் பாடிப்**
**போதொடு நீர்சுமந் தேத்திப் புகுவா ரவர்பின் புகுவேன்**
**யாதுஞ் சுவடு படாமல் ஐயா றடைகின்ற போது**

**காதன் மடப்பிடி யோடுங் களிறு வருவன கண்டேன்**
**கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன்.**

விரும்பத்தக்க பிறையை முடிமாலையாகச் சூடிய பெருமானைப் பார்வதியோடும் இணைத்துப் பாடியவர்களாய் அருச்சிக்கும் பூவும் அபிடேக நீரும் தலையில் தாங்கித் திருக்கோயிலை நோக்கிப் பெருமானைத் துதித்த வண்ணம் புகும் அடியவர்பின் சென்ற அடியேன். கயிலை மலைக்குச் சென்றபோது ஏற்பட்ட உறுப்பழிவின் சுவடு ஏதும் தோன்றாதவகையில் தீங்கு நீங்கிய யாக்கை கொண்டு, கயிலை மலையிலிருந்து கால்சுவடு படாமல் திருவையாற்றை அடைகின்ற பொழுதில், விருப்பத்திற்கு உரிய இளைய பெண்யானையோடு ஆண்யானை சேர்ந்து இரண்டுமாக வருவனவற்றைக் கண்டு, அவற்றை அடியேன் சத்தியும் சிவமுமாகக் கண்டதனால் திருப்பாதம், சிவானந்தம் ஆகிய முன் கண்டறியாதனவற்றைககண்டவனாயினேன்

2. **போழிளங் கண்ணியி னானைப் பூந்துகி லாளொடும் பாடி**
**வாழியம் போற்றியென் றேத்தி வட்டமிட் டாடா வருவேன்**
**ஆழி வலவனின் றேத்தும் ஐயா றடைகின்ற போது**
**கோழி பெடையொடுங் கூடிக் குளிர்ந்து வருவன கண்டேன்**

**கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன்.**

சந்திரனுடைய பிளப்பாகிய பிறையை முடிமாலையாகச் சூடிய பெருமானை, பூ வேலைகள் செய்யப்பட்ட மெல்லிய ஆடையை அணிந்த பார்வதியோடு இணைத்துப்பாடி, 'அவர்கள் திருவடி வாழ்க' எனவும், 'அவர்களுக்கு அடியேனுடைய வணக்கம்' எனவும் சுழன்று ஆடிக்கொண்டு வரும் அடியேன் சக்கரப்படையை வலக்கையில் ஏந்தியுள்ள திருமால் நிலையாகப் புகழும் ஐயாற்றை அடையும்போது ஆண்கோழி பெண்கோழியுடன் கூட இரண்டுமாக மகிழ்வுடன்

வருவனவற்றைக் கண்டேன். அவற்றை அடியேன் சக்தியும் சிவமுமாகக்

**3. எரிப்பிறைக் கண்ணியி னானை யேந்திழை யாளொடும் பாடி**
**முரித்த விலயங்க ளிட்டு முகமலர்ந் தாடா வருவேன்**
**அரித்தொழு கும்வெள் ளருவி ஐயா றடைகின்ற போது**
**வரிக்குயில் பேடையொ டாடி வைகி வருவன கண்டேன்**

**கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன்.**

கண்டதனால் திருப்பாதம் சிவானந்தம் ஆகிய முன் கண்டறியாதவற்றைக் கண்டேன். நிலவினை உடைய பிறைக் கண்ணியனாகிய பெருமானைச் சிறந்த அணிகளை

உடைய பார்வதியோடும், இணைத்துப்பாடிக் கூத்துக்கு ஏற்ற தாளங்களை

இட்டுக் கொண்டு முகமலர்ச்சியோடு ஆடிக்கொண்டு வரும் அடியேன்

மணலை அரித்துக் கொண்டு வெள்ளிய அருவிபோல ஓடிவருகின்ற

காவிரியின் வடகரைக்கண்ணதாகிய திருவையாற்றை அடையும்

நேரத்தில் காதற் கீதங்களைப் பாடும் ஆண்குயில் பெண்குயிலோடு கலக்க.

இரண்டும் ஓரிடத்தில் தங்கிப் பின் இணையாக வருவனவற்றைக் கண்டேன்.

அவற்றை அடியேன் சக்தியும் சிவமுமாகக் கண்டதனால் திருப்பாதம்

சிவானந்தம் ஆகிய முன் கண்டறியாதவற்றைக் கண்டேன்.

**4. பிறையிளங் கண்ணியி னானைப் பெய்வளை யாளொடும் பாடித்**
**துறையிளம் பன்மலர் தூவித் தோளைக் குளிரத் தொழுவேன்**
**அறையிளம் பூங்குயி லாலும் ஐயா றடைகின்ற போது**
**சிறையிளம் பேடையொ டாடிச் சேவல் வருவன கண்டேன்**

**கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன்.**

பிறை சூடிய பெருமானைப் பார்வதியோடும் இணைத்துப்பாடி நீர்த்துறையை

அடுத்துவளர்ந்த செடி கொடிகளின் பல மலர்களையும் அடியேன் தோள்கள்

மகிழுமாறு அருச்சித்து நான் தொழுவேனாய்ப் பாடும் இளங் குயில்கள்

ஒலிக்கும் ஐயாறு அடைகின்றபோது, இளைய பேடையோடு கலந்து வெண்

சிறகுகளை உடைய சேவல் அன்னம் இணையாக வருவனவற்றைக் கண்டேன்.

அவற்றை அடியேன் சக்தியும் சிவமுமாகக் கண்டதனால் திருப்பாதம் சிவானந்தம் ஆகிய முன் கண்டறியாதவற்றைக் கண்டேன்.

**5 ஏடு மதிக்கண்ணி யானை யேந்திழை யாளொடும் பாடிக்**
**காடொடு நாடு மலையுங் கைதொழு தாடா வருவேன்**
**ஆட லமர்ந்துறை கின்ற ஐயா றடைகின்ற போது**
**பேடை மயிலொடுங் கூடிப் பிணைந்து வருவன கண்டேன்**

**கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன்.**

இளைத்த பிறையைச் சூடிய பெருமானைப் பார்வதியோடும் இணைத்துப் பாடிக் காடுகளையும் நாடுகளையும் மலைகளையும் கையால் தொழுதுகொண்டு ஆடி மகிழ்ந்து வரும் அடியேன் எம்பெருமான் கூத்தாடுதலை விரும்பித் தங்கியிருக்கும் ஐயாற்றை அடையும்போது ஆண் மயில் பெடைமயிலொடும் கலக்க இரண்டும் இணையாய் ஒன்றொடொன்று கூடி வருவனவற்றைக் கண்டேன். அவற்றை அடியேன் சக்தியும் சிவமுமாகக் கண்டதனால் திருப்பாதம் சிவானந்தம் ஆகிய முன் கண்டறியாதவற்றைக் கண்டேன்.

**6.தண்மதிக் கண்ணியி னானைத் தையனல் லாளொடும் பாடி**
**உண்மெலி சிந்தைய னாகி யுணரா வுருகா வருவேன்**
**அண்ண லமர்ந்துறை கின்ற ஐயா றடைகின்ற போது**
**வண்ணப் பகன்றிலொ டாடி வைகி வருவன கண்டேன்**

**கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன்.**

குளிர்ந்த பிறை சூடிய பெருமானைப் பார்வதியோடும் இணைத்துப் பாடி உள்ளம் குழைந்த தி

நினைவினேன் ஆகி உணர்ந்து உருகி வரும் அடியேன் தலைமையை உடைய எம்பெருமான் உகந்தருளியிருக்கின்ற ஐயாற்றை அடையும்போது நல்லநிறமுடைய ஆண் பகன்றில் பெண் பகன்றிலோடு இணைந்து இரண்டுமாய் வருவனவற்றைக் கண்டேன். அவற்றை அடியேன் சக்தியும் சிவமுமாகக் கண்டதனால் திருப்பாதம் சிவானந்தம் ஆகிய முன் கண்டறியாதவற்

**7 கடிமதிக் கண்ணியி னானைக் காரிகை யாளொடும் பாடி**
**வடிவொடு வண்ண மிரண்டும் வாய்வேண் டுவசொல்லி வாழ்வே**
**அடியிணை ஆர்க்குங் கழலான் ஐயா றடைகின்றபோது**
**இடிகுர லன்னதொ ரேன மிசைந்து வருவன கண்டேன்**

**கண்டே னவர்திருப் பாதங்கண்டறி யாதன கண்டேன்.**

விரும்பும் பிறை சூடிய பெருமானை மெல்லியலாள் ஆகிய பார்வதியோடும் இணைத்துப்பாடி, வைகறையில் துயில் எழுந்து எம்பெருமானுக்கு ாகப் பெறப்படும் மலர்களைக் கொய்துவரும் அடியேன், சிறந்த அணிகலன்களையும் பொன்னையும் மணியையும் கரையில் சேர்க்கும் காவிரியின் வடகரையில் அமைந்த ஐயாற்றை அடையும்போது, பெரிய ஆண்மான் தன் பெடையோடு இணைய இரண்டுமாக இணைந்து வருவனவற்றைக் கண்டேன். அவற்றை அடியேன் சக்தியும் சிவமுமாகக் கண்டதனால் திருப்பாதம் சிவானந்தம் ஆகிய முன் கண்டறியாதவற்றைக் கண்டேன்.

**8 விரும்பு மதிக்கண்ணி யானை மெல்லிய லாளொடும் பாடிப்**
**பெரும்புலர் காலை யெழுந்து பெறுமலர் கொய்யா வருவேன்**
**அருங்கலம் பொன்மணி யுந்தும் ஐயா றடைகின்ற போது**
**கருங்கலை பேடையொ டாடிக் கலந்து வருவன கண்டேன்**

**கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன்.**

விளக்கம் பொருந்திய பிறை சூடிய பெருமானை மெல்லியலாள் ஆகிய பார்வதியோடும்இணைத்துப்பாடி, வைகறை யில் துயிலெழுந்து எம்பெருமானுக்கு உகப்புடையனவாகப் பெறப்படும் மலர்களைக் கொய்துவரும் அடியேன்,சிறந்த அணிகலன்களையும் பொன்னையும் மணியையும் கரையில் சேர்க்கும் காவிரியின் வடகரையில் அமைந்த ஐயாற்றை அடையும்போது, பெரிய ஆண் மான் தன் பெடையோடு இணைய இரண்டுமாக இணைந்து வருவனவற்றைக் கண்டேன். அவற்றை அடியேன் சக்தியும் சிவமுமாகக் கண்டதனால் திருப்பாதம் சிவானந்தம் ஆகிய முன் கண்டறியாதவற்றைக் கண்டேன்.

9 முற்பிறைக் கண்ணியி னானை மொய்குழ லாளொடும் பாடிப்
பற்றிக் கயிறறுக் கில்லேன் பாடியும் ஆடா வருவேன்
அற்றருள் பெற்றுநின் றாரோ டையா றடைகின்ற போது
நற்றுணைப் பேடையொ டாடி நாரை வருவன கண்டேன்

கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன்.

அமாவாசையை அடுத்து ஒருகலையினதாய் முற்பட்டுத்தோன்றும் பிறை சூடிய பெருமானைச் செறிந்த கூந்தலை உடைய பார்வதியோடும் இணைத்துப்பாடி, அவன் திருவடிகளைப் பற்றி உலகினோடு உள்ள பாசத்தைப் போக்கிக் கொள்ள முடியாத அடியேன், பாடிக்கொண்டும் ஆடிக்கொண்டும் வந்த எம்பெருமானுக்கே அற்றுத் தீர்ந்து அவன் அருள் பெற்று நிலவும் அடியார்கள் உடன் ஐயாற்றை அடையும்போது, சிறந்த துணையாகிய பெடையோடு ஆண் நாரைகள் கூட இரண்டுமாக இணைந்து வருவனவற்றைக் கண்டேன். அவற்றை அடியேன் சக்தியும் சிவமுமாகக் கண்டதனால் திருப்பாதம் சிவானந்தம் ஆகிய முன்கண்டறியாதவற்றைக் கண்டேன்.

1.0திங்கள் மதிக்கண்ணி யானைத் தேமெழி யாளொடும் பாடி
எங்கருள் நல்குங்கொ லெந்தை யெனக்கினி யென்னா வருவேன்
அங்கிள மங்கைய ராடும் ஐயா றடைகின்ற போது
பைங்கிளி பேடையொ டாடிப் பறந்து வருவன கண்டேன்

கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன்.

பிறை சூடிய பெருமானைத் தேன் போன்ற சொற்களை உடைய பார்வதியோடு இணைத்துப் பாடி எம்பெருமான் இப்பொழுது அடியேனுக்கு எங்கு அருள் செய்வானோ என்று திருத்தலங்களை வழிபட்டுவரும் அடியேன் இளமங்கையர்கள் கூத்து நிகழ்த்தும் ஐயாற்றை அடையும்போது பச்சைக் கிளி தன் பெடையோடு மகிழ, இரண்டுமாக இணைந்து பறந்து வருவனவற்றைக் கண்டேன். அவற்றை அடியேன் சக்தியும் சிவமுமாகக் கண்டதனால் திருப்பாதம் சிவானந்தம்

ஆகிய முன் கண்டறியாதவற்றைக் கண்டேன்.

**11 வளர்மதிக் கண்ணியி னானை வார்குழ லாளொடும் பாடிக்**
**களவு படாததொர் காலங் காண்பான் கடைக்கணிற் கின்றேன்**
**அளவு படாததொ ரன்போ டையா றடைகின்ற போது**
**இளமண நாகு தழுவி யேறு வருவன கண்டேன்**

**கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன்.**

வளர்தற்குரிய பிறை சூடிய பெருமானை நீண்ட கூந்தலை உடைய பார்வதியோடு இணைத்துப்பாடி, வீணாகக் கழிக்கப் படாத தொரு காலத்தைக் காணும் பொருட்டுக் கடைவாயிலின்கண் நிற்கும் அடியேன், எல்லையற்ற அன்போடு ஐயாற்றை அடையும்பொழுது இளமையை உடையதாய்க் கலத்தலுக்கு ஏற்றதாய பசுவினை, ஏறு தழுவ, இரண்டுமாய் இணைந்து வருவனவற்றைக் கண்டேன். அவற்றை அடியேன் சக்தியும் சிவமுமாகக் கண்டதனால் திருப்பாதம் சிவானந்தம் ஆகிய முன் கண்டறியாதவற்றைக் கண்டேன்.

## 3.சுந்தரர் வரலாறு

*திருக்கயிலைமால் வரையில் சிவபிரானுடைய அடியார்களில் ஒருவர் ஆலாலசுந்தரர்இறைவனுக்கு மலர் கொய்தலும் மாலை . தொடுத்தணிதலும் திருநீற்றை ஏந்தி நிற்றலுமாகிய அணுக்கத் தொண்டினை மேற்கொண்டவர்அவர் ஒரு நாள் வழக்கம்போல் நறுமலர் . கொய்துவரத் திருநந்தவனத்தை அடைந்தார்அங்கு உமையம்மையாரின் . சேடியர்களில் அநிந்திதை கமலினி என்ற மதிமுக நங்கையர் இருவர் முன்னரே மலர் கொய்து கொண்டிருந்தனர்ஆலாலசுந்தரர் இறைவன் . திருவருளால் இவ்விருவரையும் கண்டு காதல் கொண்டார். அந்நங்கையர் இருவரும் ஆலாலசுந்தரர்தம் அழகில் ஈடுபட்டுக்*

**காதல் கொண்டனர்மகளிர்பாற் சென்ற மனத்தை மீட்டுச் சுந்தரர் .**

**இறைவனுக்குரிய நல்மலர்களைக் கொய்துகொண்டு பெருமான் திருமுன் சென்றார்.**

**அம்மகளிரும் அவ்வாறே மலர் கொய்து சென்றனர்.**

கும் உள்நின்று அருள்சுரக்கும் பெருமான்,

தை அறிந்தார் சுந்தரரை விளித்து . ` நீ மாதர்மேல்

தென்னாட்டில் பிறந்து அம்மகளிருடன் .

மகிழ்ந்து பின்னர் இங்கு வருக` என்று பணித்தார்

னம் கலங்கிக் கைகளைத் தலைமேல் குவித்து .

டைய திருவடித்தொண்டிலிருந்து நீங்கி ! மானுடப்பிறப்பை

அடியேனைத் தடுத்தாட்கொண்டருள வேண்டும்`

சுந்தரருடைய வேண்டுகோளுக்கு இசைந்தருளினார் .

<u>பிறப்பும் வளர்ப்பும்:</u>

ஆலாலசுந்தரர் இறைவன் திருவருளால் தென்தமிழ் நாட்டில் திருமுனைப்பாடி

நாட்டின் தலைநகராகிய திருநாவலூரில் மாதொருபாகனாருக்கு வழிவழி

அடிமை செய்யும் ஆதிசைவ வேதியருள் சிறந்தவராகிய சடையனார்க்கு அவர்தம்

அருமைத் திருமனைவியார் இசைஞானியார்பால் தீதகன்றுலகம் உய்யத்

திருவவதாரம் செய்தருளினார்சிவபிரான் அருளால் தோன .

றிய தம் குழந்தைக்கு நம்பியாரூரர் என்று திர்ுப்பெயரிட்டனர் பெற்றோர்.

நம்பியாரூரர் நடைபயிலத் தொடங்கித் தெருவீதியில் சிறுதேர் உருட்டி

¥விளையாடிக்கொண்டிருந்த காலத்து அந்நாட்டு அரசர் நரசிங்கமுனையரையர்

அக் குழந்தையின் அறிவொளி திகழும் திருமுகப் பொலிவினைக் கண்டு மகிழ்ந்து

பெற்றோர்களிடம் சென்று நட்புரிமையால் நம்பியாரூரரை வேண்டிப் பெற்றுத் தம்

அரச பதவிக்குரிய தம் அரசிளங்குமரராகக் கருதி அன்போடு வளர்த்து வருவாராயினார்.

அரசரின் அபிமானப் புதல்வராய் வளர்ந்த நம்பியாரூரர் அந்தணர்மரபுக்கேற்ப

முந்நூல் அணிந்து அளவற்ற கலைகளில் வல்லவராய் விளங்கினார்இவ்வாறு இ .

ளம் பருவத்திலேயே திருவும் கல்வியும் வாய்க்கப்பெற்ற நம்பியாரூரர்

இளவரசராயிருந்து பழகித் திருமணப்பருவத்தை அடைந்தார்.

சடையனார் தம் மைந்தர்க்குத் திருமணம் செய்ய எண்ணி னார்

திருநாவலூரை அடுத்த புத்தூரில் சை அந்தணர் மரபில் வந்த ச .

டங்கவி சிவாசாரியார் என்னும் பெரியாரின் திருமகளை மணம்

பேசி வரப் பெரியோர்களை அனுப்பினார்சடங்கவி சிவாசாரியாரும் பெரி யோரை வரவேற்றுப .

தம்முடைய திருமகளை மணம் செய்து தர இசைந்தார் .சரித்தார்

.முதியோரும் சென்று இம்மகிழ்ச்சியைச் சடைய னாருக்குத் தெரிவித்தனர் .

அதனைக்கேட்டு மகிழ்ந்த சடையனார் திருமண நன்னாளை உறுதிசெய்து

நம்பியாரூரரது அரச பதவிக்கு ஏற்பச் சுற்றத்தார் நண்பர்

முதலானோர்க்குத் திருமணத் திருமுகம் அனுப்பினார்புத்தூரில் சடங்கவி சிவாசாரிய .

ாரும் திருமணம் நிகழ்த்தற்கு வேண்டி

ய எல்லாவற்றையும் குறைவறச் செய்தார

# திருப்புன்கூர்

| | |
|---|---|
| றவர் ப்பெயர்: | **சிவலோகநாதர்.** |
| இறைவியார் திருப்பெயர்: | **சொக்கநாயகி, சௌந்தர நாயகி.** |
| தல மரம்: | புங்க மரம் |
| தீர்த்தம் : | **கணபதி தீர்த்தம், தேவேந்திர தீர்த்தம், அக்கினி தீர்த்தம், இடட** |

**பிரமன், இந்திரன், அகத்தியர், சந்திரன், சூரியன், அக்கினி,**

பட்டோர்: **பதஞ்சலி, வியாக்ரபாதர், சப்தகன்னியர்,**

**ஏயர்கோன் கலிக்காமர்,இராசேந்திர சோழன் முதலியோர்.**

*தல வரலாறு*

புங்கு .புன்கூர் என்றாயிற்று - புங்கூர் = ஊர் +

இங்குள்ள தீர்த்தம் விநாயகருடைய துணையால் நந்தனார் வெட்டியதாகும்.

இத்தலத்திற்குரிய பன்னிருவேலி பெற்ற வரலாறு தன் :

நாட்டில் பஞ்சம் நிலவியதால் இராசேந்திரசோழன் எல்லாச்

சிவாலயங்களிலும் பூசைகளைச் செய்தான்அவன் கனவில் இறைவன் தோன்றித்

ருப்புன்கூர் சிவலோக நா

தரை வழிபடின் மழையுண்டாகும் என்றருள, அவ்வாறே

மன்னனும் அங்கு வந்து சுவாமியை வழிபட்டான்அப்போது சுந்தரர் அங் .

.கு வந்தார் அரசன் அவரை வணங்கி, சந்நிதியில் பாடி மழை

செய்விக்குமாறு வேண்டினான்சுந்தரரும் மழைசெய்வித்த .

ால் சுவாமிக்குப் பன்னிருவேலி

நிலமளிக்குமாறு மன்னனுக்கு கட்டளையிட்டுவிட்டுப் பாடினார்,

மழைசெய்ததுஎங்கும் வெள்ளம் பெருக்கெடுத்து .

மழைமிகுதியைக் கண்ட மன்னன் .ஓடியது, அதை நிறுத்தாவிடில்

பெருஞ்சேதம் உண்டாகும் என்றெண்ணிச் சுந்தரரைப்

பார்த்து நிறுத்துமாறு பாடியருள வேண்ட, அவரும் மேலும்

பன்னிருவேலி, நிலம் கேட்க, மன்னனும் தர, சுந்தரரும்

பாடியருள மழையும் நின்றது.

திருப்புன்கூருக்கு வந்து சிவலோக நாதரைத் தரிசிக்க

முயன்ற திருநாளைப்போவார் (நந்தனார்), தன் குலநிலையை

எண்ணி வெளியிலிருந்து பார்க்க, நந்தி மறைத்திருப்பது கண்டு

வருந்தினார்இறைவன் இவருடைய உள்ளப் பக்தியைக் கண்டு மகிழ்ந் .

து நந்தியைச் சற்று விலகியிருக்கும

இன்றும் ந .ாறு பணித்தார்

நந்தி .ந்தி இத்தலத்தில் விலகியிருப்பதைக் காணலாம்விலகத்

தரிசித்த நாளைப்போவார் கோயிலின் மேற்புறமுள்ள

ரிஷபதீர்த்தத்தை வெட்டிச் சீர்ப்படுத்த எண்ணித் தனக்குத்

துணை யாருமில்லாததால் இறைவனை வேண்ட, இறைவன்

அவருக்குத் துணையாகுமாறு கணபதியை அனுப்பினார்

அதுவே .அவர் துணையால் அத்தீர்த்தத்தை வெட்டிச் சீர்ப்படுத்தினார் .

கணபதிதீர்த்தம் என்றும் பெயர் பெற்றதுஎனவே இங்குள்ள வி .

நாயகர்'குளம் வெட்டிய விநாயகர் ' என்றழைக்கப்படுகிறார்.

.

ஏழாம் திருமுறை - தேவாரப் பதிகங்கள் -திருப்புன்கூர்

**திருப்புன்கூர்**

**பண் - தக்கேசி**

திருச்சிற்றம்பலம்

லம் சோழநாட்டிலுள்ளது. சுந்தரமூர்த்திசுவாமிகள்

புன்கூருக்கெழுந்தருளியபோது அந்தத்தலத்தார் கண்டு

ழுது சுவாமீ! இங்கு நெடுநாளாக மழைபொழிதலின்றி

துகிறோம், ஆதலால் கிருபைபாலிக்கவேண்டுமென்று

ணப்பஞ்செய்ய, மழைபொழிந்தால் சுவாமிக்கியாது

ரீர்களென்ன, அவர்கள் பன்னிரண்டு வேலி நிலந்தருகிறோமென்னக்

மப கூர்ந்து இந்தப்பதிகமோதியருளலும், மழை அதிகமாய்ப்பெய்ய

களுடையவேண்டுதலினால் மழை தணிந்து பெய்யும்படிசெய்து

னமவர்கள் சொல்லிய பன்னிரண்டுவேலி நிலமேயன்றி மீட்டும்

ிரண்டுவேலி நிலங்கொடுக்கப்பெற்றருளியது.

**மிபெயர் - சிவலோகநாதர்.**
**யொர் - சொக்கநாயகியம்மை.**

**1. அந்த ணாளனுன் னடைக்கலம் புகுத**

**அவனைக் காப்பது காரண மாக**
**வந்த காலன்றன் ஆருயி ரதனை**

**வவ்வி னாய்க்குன்றன் வன்மைகண் டடியேன்**
**எத்தை நீயெனை நமன்தமர் நலியில்**

**இவன்மற் றென்னடி யானென விலக்கும்**
**சிந்தையால் வந்துன் திருவடி யடைந்தேன்**

**செழும்பொ ழில்திருப் புன்கூரு ளானே.**

வளவிய சோலைகளையுடைய திருப்புன்கூரில் எழுந்தருளியிருப்பவனே,

முனிவன் ஒருவன் உன்னை அடைக்கலமாக அடைய, அவனைக் காத்தல்

நிமித்தமாக, அவன்மேல் வந்த கூற்றுவனது அரிய உயிரைக் கவர்ந்த

உனக்கு அடியேனாகிய யான், உனது அவ்வாற்றலையறிந்து, என்னையும்

இயமன் தூதர்கள் வந்து துன்புறுத்துவார்களாயின், என்தந்தையாகிய நீ, 'இவன்

என் அடியான்; இவனைத் துன்புறுத்தாதீர்' என்று சொல்லி விலக்குவாய்

என்னும் எண்ணத்தினால் வந்து உன் திருவடியை

அடைந்தேன்;என்னைஏன்றுகொண்டருள்.

**2. வையக முற்று மாமழை மறந்து**

**வயலில் நீரிரை மாநிலந் தருகோம**

**உய்யக் கொள்கமற் றெங்களை யென்ன**

**ஒளிகொள் வெண்முகி லாய்ப்பரந் தெங்கும்**
**பெய்யு மாமழைப் பெருவெள்ளந் தவிர்த்துப்**

**பெயர்த்தும் பன்னிரு வேலிகொண் டருளும்**
**செய்கை கண்டுநின் திருவடி யடைந்தேன்**

**செழும்பொ ழில்திருப் புன்கூரு ளானே.**

வளவிய சோலைகளையுடைய திருப்புன்கூரில் எழுந்தருளியிருப்பவனே, இவ்வூரிலுள்ளவர், 'உலகமுழுதும் நிரம்பிய மழையின்மையால் வயலில் நீர் இல்லையாயிற்று; மிக்க நிலங்களை உனக்குத் தருவோம்; எங்களை உய்யக்கொள்க' என்று வேண்ட, ஒளியைக் கொண்ட வெண்முகிலாய்ப் பரந்திருந்தவை, அந்நிலைமாறி, எங்கும் பெய்த பெருமழையால் உண்டாகிய பெருவெள்ளத்தை நீக்கி, அதன் பொருட்டு அவர்களிடம் மீட்டும் பன்னிரு வேலி நிலத்தைப் பெற்றருளிய செயலையறிந்து வந்து, அடியேன் உன் திருவடியை அடைந்தேன்; என்னை ஏன்று கொண்டருள்.

**3.ஏத நன்னிலம் ஈரறு வேலி**

**ஏயர் கோன்உற்ற இரும்பிணி தவிர்த்துக்**
**கோத னங்களின் பால்கறந் தாட்டக்**

**கோல வெண்மணற் சிவன்றன்மேற் சென்ற**
**தாதை தாளற எறிந்த சண்டிக்குன்**

**சடைமி சைமலர் அருள்செயக் கண்டு**
**பூத வாளிநின் பொன்னடி யடைந்தேன்**

**பூம்பொ ழில்திருப் புன்கூரு ளானே.**

பூதகணங்கட்குத் தலைவனே, அழகிய சோலைகளையுடைய திருப்புன்கூரில் எழுந்தருளியிருப்பவனே, நீ, நல்ல நிலங்கள் பன்னிருவேலி கொடுத்த ஏயர்கோன் அடைந்த, துன்பத்தைச் செய்யும் பெரிய நோயை இப்பொழுது தீர்த்த்தனையும், முன்பு பசுக்களது மடியில் நிறைந்திருந்த பாலைக் கறந்து ஆட்ட அதனைப் பொறாது அங்ஙனம் ஆட்டப்பட்ட அழகிய வெண் மணலாலாகிய பெருமான்மேற்

சென்ற தந்தையது பாதங்கள் துணி பட்டு விழுமாறு வெட்டிய சண்டேசுர நாயனாருக்கு உனது முடியின் மேற் சூடியுள்ள கொன்றைமாலையை எடுத்துச் சூட்டியருளியதையும் அறிந்து வந்து, அடியேன், உனது பொன்போலும் திருவடியை அடைந்தேன்; என்னை ஏன்று கொண்டருள்.

**4. நற்ற மிழ்வல்ல ஞானசம் பந்தன்**

**நாவினுக் கரையன் நாளைப்போ வானும்**
**கற்ற சூதன்நற் சாக்கியன் சிலந்தி**

**கண்ணப் பன்கணம் புல்லன்என் றிவர்கள்**
**குற்றஞ் செய்யினுங் குணமெனக் கருதுங்**

**கொள்கை கண்டுநின் குரைகழ லடைந்தேன்**
**பொற்றி ரள்மணிக் கமலங்கள் மலரும்**

**பொய்கை சூழ்திருப் புன்கூரு ளானே.**

பொன்போலும், திரளாகிய அழகிய தாமரை மலர்கள் மலர்கின்ற பொய்கைகள் சூழ்ந்த திருப்புன்கூரில் எழுந்தருளி யிருப்பவனே, 'நல்ல தமிழைப் பாட வல்ல ஞானசம்பந்தனும், நாவுக்கரையனும், நாளைப்போவானும், சூதாடுதலை நன்கு கற்ற மூர்க்கனும், நல்ல சாக்கியனும், சிலந்தியும், கண்ணப்பனும், கணம் புல்லனும்' என்ற இவர்கள் குற்றமான செயல்களைச் செய்யவும், அவைகளைக் குணமான செயலாகவே கருதிய உனது திருவுள்ளத்தின் தன்மையை அறிந்து, வந்து, அடியேன், உனது ஒலிக்கின்ற கழலை யணிந்த திருவடியை அடைந்தேன்; என்னை ஏன்றுகொண்டருள்.

**5 கோல மால்வரை மத்தென நாட்டிக்**

**கோள ரவுசுற் றிக்கடைந் தெழுந்த**
**ஆல நஞ்சுகண் டவர்மிக இரிய**

**அமரர் கட்கருள் புரிவது கருதி**
**நீல மார்கடல் விடந்தனை யுண்டு**

**கண்டத் தேவைத்த பித்தநீ செய்த**

**சீலங் கண்டுநின் திருவடி யடைந்தேன்**

**செழும்பொ ழில்திருப் புன்கூரு ளானே.**

வளவிய சோலைகளையுடைய திருப்புன்கூரில் எழுந்தருளியிருப்பவனே, தேவர்கள், அழகிய பெரிய மலையை மத்தாக நாட்டி, கொடிய பாம்பைக் கயிறாகச் சுற்றிப் பாற்கடலைக் கடைந்து, அதில் அமுதந் தோன்றாது பெருவிடந் தோன்றியதைக் கண்டு அவர்கள் பெரிதும் ஓடிவந்து அடைய அவர்கட்கு உதவுதல் கருதி, கருமை நிறைந்த, அக் கடல் விடத்தை உண்டு, அஃது என்றும் நின்று விளங்குமாறு கண்டத்தே வைத்த பேரருளாளனே, நீ செய்த இந் நல்ல செய்கையையறிந்து வந்து, அடியேன் உன் திருவடியை அடைந்தேன்; என்னை ஏன்றுகொண்டருள்

6. **இயக்கர் கின்னரர் ஞமனொடு வருணன்**

**இயங்கு தீவளி ஞாயிறு திங்கள்**
**மயக்க மில்புலி வானரம் நாகம்**

**வசுக்கள் வானவர் தானவ ரெல்லாம்**
**அயர்ப்பொன் றின்றிநின் திருவடி யதனை**

**யர்ச்சித் தார்பெறும் ஆரருள் கண்டு**
**திகைப்பொன் றின்றிநின் திருவடி யடைந்தேன்**

**செழும்பொ ழில்திருப் புன்கூரு ளானே.**

வளவியசோலையையுடைய திருப்புன்கூரில் எழுந்தருளியிருப்பவனே, இயக்கரும், கின்னரரும், இயமனும், வருணனும், அக்கினியும், இயங்குகின்ற வாயுவும், சூரியனும், சந்திரனும், வசுக்களும், ஏனைய தேவர்களும், அசுரர்களும், மற்றும் அறியாமை நீங்கின புலி, குரங்கு, பாம்பு முதலியனவும் உனது திருவடியை மறத்தல் சிறிதும் இன்றி வழிபட்டுப் பெற்ற அரிய திருவருளை யறிந்து அடியேனும், தடுமாற்றம் சிறிதும் இன்றி உன் திருவடியை அடைந்தேன்; என்னை ஏன்று கொண்டருள்.

7 போ?த்த நீள்செவி யாளர்அந் தணர்க்குப்

பொழில்கொளால் நிழற் கீழறம் புரிந்து
பார்த்த னுக்கன்று பாசுப தங்கொடுத்

தருளி னாய்பண்டு பகீரதன் வேண்ட
ஆர்த்து வந்திழி யும்புனற் கங்கை

நங்கை யாளைநின் சடைமிசைக் கரந்த
தீர்த்த னேநின்றன் திருவடி யடைந்தேன்

செழும்பொ ழில்திருப் புன்கூரு ளானே.

தூயவனே, வளவிய சோலைகளையுடைய திருப்புன்கூரில் எழுந்தருளியிருப்பவனே , நற்பொருள்களை உள்ளடக்கிய பெரிய செவிகளையுடைய முனிவர்களுக்கு, அன்று சோலைகளைச் சூழக்கொண்ட ஆலமரத்தின் கீழிருந்து அறத்தைச் சொல்லியும், அருச்சுனனுக்கு அன்று பாசுபதத்தைக் கொடுத்தும் பகீரதன் வேண்டிக்கொள்ள அவன்பொருட்டு, ஆரவாரித்து வீழ்ந்த நீர்வடிவாகிய கங்கையாளை முன்பு உனது சடையில், அடக்கியும் அருள்செய்தாய்; அவற்றை யெல்லாம் அறிந்து வந்து, அடியேன் உன் திருவடியை அடைந்தேன்; என்னை ஏன்றுகொண்டருள்.

8. மூவெயில் செற்ற ஞான்றுய்ந்த மூவரில்

இருவர் நின்திருக் கோயிலின் வாய்தல்
காவ லாளர்என் றேவிய பின்னை

ஒருவன் நீகரி காடரங் காக
மானை நோக்கியோர் மாநடம் மகிழ

மணிமு ழாமுழக் கவருள் செய்த
தேவ தேவநின் திருவடி யடைந்தேன்

செழும்பொ ழில்திருப் புன்கூரு ளானே.

தேவதேவனே, வளவிய சோலைளையுடைய திருப்புன்கூரில் எழுந்தருளியிருப்பவனே, நீ, முப்புரத்தை அழித்த காலத்தில் அழியாது பிழைத்த அசுரர் மூவரில் இருவரை உனது திருக்கோயிலின் வாயில் காவலராகும்படி பணித்தபின்பு,

மற்றொருவனை, நீ, கரிந்த காடே அரங்கமாக, உமையவளை நோக்கி ஒப்பற்ற பெரிய நடனத்தை மகிழ்ந்து செய்யும் பொழுது அழகிய மத்தளத்தை முழக்கும் படி அருள்செய்ததை யறிந்து வந்து. அடியேன் உன் திருவடியை அடைந்தேன்; என்னை ஏன்றுகொண்டருள்.

**9.அறிவி னால்மிக்க அறுவகைச் சமயத்**

**தவ்வவர்க் கங்கே ஆரருள் புரிந்து**
**எறியு மாகடல் இலங்கையர் கோனைத்**

**துலங்க மால்வரைக் கீழடர்த் திட்டுக்**
**குறிகொள் பாடலின் இன்னிசை கேட்டுக்**

**கோல வாளொடு நாளது கொடுத்த**
**செறிவு கண்டுநின் திருவடி யடைந்தேன்**

**செழும்பொ ழில்திருப் புன்கூரு ளானே.**

வளவிய சோலைகளையுடைய திருப்புன்கூரில் எழுந்தருளியிருப்பவனே, நூலறிவினால் மிக்க ஆறுவகைப் பட்ட சமயங்களில் உள்ள அவரவர்க்கும் அச்சமயத்திற்றானே, அரிய திருவருளைச் செய்தும், அலையெறியும் பெரிய கடலிடத்து உள்ள இலங்கையில் உள்ளார்க்கு அரசனாகிய இராவணனை, அவனுக்கு அறிவு தோன்றுமாறு பெரிய மலைக்கீழ் வைத்து நெரித்து, பின்பு அவன் பாடிய, உய்யும் கருத்தைக்கொண்ட பாடலினது இனிய இசையைக்கேட்டு, அழகிய வாளோடு, மிக்க வாழ்நாளையுங் கொடுத்தும் அருளிய உனது மிகுந்த திருவருளை அறிந்து வந்து, அடியேன் உன் திருவடியை அடைந்தேன்; என்னை ஏன்று கொண்

**10. கம்ப மால்களிற் றின்னுரி யானைக்**

**காமற் காய்ந்ததோர் கண்ணுடை யானைச்**
**செம்பொ னேயொக்குந் திருவுரு வானைச்**

**செழும்பொ ழில்திருப் புன்கூரு ளானை**
**உம்ப ராளியை உமையவன் கோனை**

**ஊரன் வன்றொண்டன் உள்ளத் தாலுகந்**

**தம்பி னாற்சொன்ன அருந்தமி ழைந்தோ**

**டைந்தும் வல்லவர் அருவினை யிலரே.**

அசைதலையுடைய பெரிய யானையினது தோலை உடையவனும், காமனை எரித்த ஒரு கண்ணை உடையவனும், செம்பொன்னே போல்வதாகிய அழகிய மேனியை உடையவனும், தேவர்களை ஆள்பவனும், உமையவளுக்குத் தலைவனும் ஆகிய, வளவிய சோலைகளையுடைய திருப்புன்கூரில் எழுந்தருளியிருக்கின்ற பெருமானை, வன்றொண்டனாகிய நம்பியாரூரன் மனத்தால் விரும்பி, அங்ஙனம் விரும்பிய அவ்வன்பானே சொல்லிய அரிய இத்தமிழ்ப் பாடல்கள் பத்தினையும் பாட வல்லவர், நீங்குதற்கரிய வினைகளை இல்லாதவராவர்; இது திண்ணம்.

## மாணிக்க வாசகர் I.திருத்தசாங்கம்

**இது தில்லையில் அருளிச்செய்தது.**

அரசனுக்குரிய பத்து உறுப்புகளும் இறைவனிடத்தில் காணப்படும்

முறை கூறப்பட்டுள்ளதுதசாங்கங்கள் கீர்த்தித் திருவகவலில் .

கூறப்பட்டனஇவையனைத்தும் தலைவி கிளியைப் பார்த்துக் கூறப்பட்டனவ .

இறைவனது தசாங்கங் .ாகவே சொல்லப்பட்டுள்ளன

.களையும் தலைவி கிளியின் வாயால் கேட்டு இன்புறுகின்றாள் என்க

**அடிமை கொண்ட முறைமை**

இறைவன் அடிகளை ஆட்கொண்ட முறை.

**நேரிசை வெண்பா**

**திருச்சிற்றம்பலம்**

**1.ஏரார் இளங்கிளியே எங்கள் பெருந்துறைக்கோன்**
**சீரார் திருநாமம் தேர்ந்துரையாய் ஆரூரன் -**
**செம்பெருமான் வெண்மலரான் பாற்கடலான் செப்புவபோல்**
**எம்பெருமான் தேவர்பிரான் என்று.**

**விளக்கம்**: 'எங்கள் பெருந்துறைக்கோன்' என்றது உரிமை பற்றி என்கசென்ற திருப்பதி

'எந்தமராம் இவன்' என்ற பெருமான் வாக்கையும் காண்க .'ஆரூரன்,

செம்பெருமான், எம்பெருமான், தேவர் பிரான்' என்ற திருநாமங்களில்

தேவர் பிரான் என்பது முதன்மைத் திருநாமம்பாற்கடலில் தேவர்களை அழிக்க வந்த

ன் உண்டு அவர்களைக் காப்பாற்றி

ஆதிமூர்த்திகட்கருள்" .னமையின் தேவர் பிரான் ஆயினான் புரிந்தருளிய தேவ

தேவன் திருப்பெயராகவும்

.என்று கீர்த்தித் திருவகவலில் வருதல் காண்க "'வெண்மலரான்' என்பதில் வெண்மை

தூய்மையைக் குறித்தது என்க.

**3**

**செய்யவாய்ப் பைஞ்சிறகிற் செல்வீநஞ் சிந்தைசேர்**
**ஐயன் பெருந்துறையான் ஆறுரையாய் தையலாய் -**
**வான்வந்த சிந்தை மலங்கழுவ வந்திழியும்**
**ஆனந்தங் காணுடையான் ஆறு.**

**விளக்கம்**: கிளி அஃறிணையேயாயினும், அதனை உயர்த்திக் கூறுதற்பொருட்டு

, 'செல்வீ' என்றும், 'தையலாய்' என்றும் விளித்தாள்இவற்றால் ., கிளி,

பெண் கிளி என்பதும் அறியப்படுகின்றது .'தானந்தம் இல்லான்

தனையடைந்த நாயேனை ஆனந்த வெள்ளத் தழுத்துவித்தான்'

(திருச்சாழல்என்றதால் (, ஆனந்த வெள்ளம் என்பது தெரிகிறதுஆற்று வெள்ள .

ம் போலாது, இவ்வானந்த வெள்ளம் மனக்குற்றங்களைப் போக்குமாதலின், 'சிந்தை

மலங்கழுவ வந்திழியும் ஆனந்தங் காணுடையான் ஆறு.' என்றாள் .'ஊனந்

தன்னை ஒருங்குடனறுக்கும் ஆனந்தம்மே ஆறா அருளியும்'

(கீர்த்தித்திருவகவல்.என்ற வாக்கையும் ஒப்பிட்டுக்கொள்க (

இதனால், இறைவனது ஆறு கூறப்பட்டது.

**4**

**கிஞ்சுகவாய் அஞ்சுகமே கேடில் பெருந்துறைக்கோன்**
**மஞ்சன் மருவும் மலைபகராய் நெஞ்சத் -**

**திருளகல வாள்வீசி இன்பமரு முத்தி**
**அருளுமலை என்பதுகாண் ஆய்ந்து.**

**விளக்கம்**: இறைவன் தன் திருவருளை மேகம் போலப் பொழிபவனாதலின், 'மஞ்சன்' என்பதற்கு, மேகம் போன்றவன் என்று பொருள் கொள்ளப்பட்டது .'அண்டத் தரும்பெறல் மேகன் வாழ்க' என்ற திருவண்டப்பகுதியையும் காண்கஇறைவனுக்கு அருளே மலை என்பதை ., 'அருளிய பெருமை அருள்மலை யாகவும்' என்று கீர்த்தித்திருவகவலில் குறித்திருத்தல் காண்க. இதனால், இறைவனது மலை கூறப்பட்டது.

**5**

**இப்பாடே வந்தியம்பு கூடுபுகல் என்கிளியே**
**ஒப்பாடாச் சீருடையான் ஊர்வதென்னே எப்போதும் -**
**தேன்புரையுஞ் சிந்தையராய்த் தெய்வப்பெண் ணேத்திசைப்ப**
**வான்புரவி யூரும் மகிழ்ந்து.**

**விளக்கம்** : 'புகல்' என்பதிலுள்ள 'அல்' எதிர்மறைப்பொருளில் வந்தது .'தேன் புரையும் சிந்தை' என்றது, அன்புள்ள மனம் என்றபடிகீர்த்தித்திருவகவலில் . , 'அரியொடு பிரமற்கு அளவறியாதவன் பரிமா வின்மிசைப் பயின்ற வண்ணமும்' என்று தமக்கு அளித்த காட்சியையே குறித்திருத்தலாலும், அவ்வாறு குறிக்கப்பட்ட குதிரை வேதமேயாகையாலும், 'வான்புரவி' என்றதற்கு 'வேதமாகிய குதிரை' என்ற பொருள் உரைக்கப்பட்டது. இதனால்.இறைவனது குதிரை கூறப்பட்டது .

**கோற்றேன் மொழிக்கிள்ளாய் கோதில் பெருந்துறைக்கோன்**
**மாற்றாரை வெல்லும் படைபகராய் ஏற்றார் -**
**அழுக்கடையா நெஞ்சுருக மும்மலங்கள் பாயுங்**
**கழுக்கடைகாண் கைக்கொள் படை.**

**விளக்கம்**: சூலம், முத்தலை வேலாதலின் அதனைக் கைக்கொண்டு மூலமாகிய மும்மலங்களையும் அறுக்கிறான் என்பதை, 'கழுக்கடை தன்னைக் கைக்கொண்டருளியும் மூலமாகிய மும்மல மறுக்கும்' என்ற கீர்த்தித்திருவகவல் அடிகளால் அறிக.காண் முன்னிலை அசை .

இதனால், இறைவனது படைக்கலம் கூறப்பட்டது.

7

**இன்பால் மொழிக்கிள்ளாய் எங்கள் பெருந்துறைக்கோன்
முன்பால் முழங்கும் முரசியம்பாய் அன்பாற் -
பிறவிப் பகைகலங்கப் பேரின்பத் தோங்கும்
பருமிக்க நாதப் பறை.**

விளக்கம்: 'அன்பால்' என்றது இங்கு அடியார் செலுத்தும் அன்பினைக்

குறித்ததுஅன்பு செலுத்தினால் பிறவி ஒழியுமாதலின் ., 'பிறவி கலங்க'

என்றாள்நாதம் என்பது சூக்குமை .

இது நுண்மையாக ஒலித்துப் பேரின்பம் பயக்குமாதலின் .வாக்கு என்க, 'பேரின்பத்

தோங்கும் நாதப்பறை' என்றாள் .'நாதப் பெரும்பறை நவின்று கறங்கவும்' என்ற

கீர்த்தித்திருவகவல் அடியை ஒப்பிட்டுக்கொள்க.

இதனால், இறைவனது பறை கூறப்பட்டது.

8

**ஆய மொழிக்கிள்ளாய் அள்ளூறும் அன்பர்பால்
மேய பெருந்துறையான் மெய்த்தார்என் தீயவினை -
நாளுமணு காவண்ணம் நாயேனை ஆளுடையான்
தாளிஅறு காம்உவந்த தார்.**

விளக்கம்: கொன்றைமாலை போலவே கழுநீர் மாலை தாளியறுகு

மாலைகளையும் சிறப்பாகச் சிவபெருமான் அணிபவன் என்பதை விளக்க

, கீர்த்தித்திருவகவலில் கழுநீர் மாலையையும், இங்குத் தாளியறுகின்

மாலையையும் அடையாள மாலையாகக் கூறினார் .'தாளியறுகு' என்பது

அறுகம்புல்லில் ஒரு வகை என்பது முன்னர்க் கூறப்பட்டது.

இதனால், இறைவனது மாலை கூறப்பட்டது.

9

**சோலைப் பசுங்கிளியே தூநீர்ப் பெருந்துறைக்கோன்
கோலம் பொலியுங் கொடிகூறாய் சாலவும் -
ஏதிலால் துண்ணென்ன மேல்விளங்கி ஏர்காட்டுங்
கோதிலா ஏறாங் கொடி.**

**விளக்கம்**: பகைவத்க்கு இக்கொடி அச்சம் விளைவிக்கு மாதலின், 'ஏதிலார் துண்ணென்ன' என்றாள்எனினும் ., நன்மையே பயக்குமாதலின், 'கோதிலாக் கொடி' என்றாள்இடபக்கொடி என்பது ., இடபம் எழுதப்பட்ட கொடியாம்.

இதனால், இறைவனது கொடி கூறப்பட்டது.

## II. குயிற்பத்து

(குயிலை முன்னிலைப்படுத்திக் கூறும் பத்துப் பாடல்கள் அடங்கிய பகுதி குயிற்பத்துதலைவி ., தலைவன் பிரிந்த பிரிவினை ஆற்றாமையினால், குயிலைப் பார்த்துச் சொல்வதாக அமைந்துள்ளது இப்பகுதி.

**ஆத்துமவிரக்கம்** ஆன்மா இறைவனை அடைய விரும்பி இரங்குதல்.**அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்**

**கீத மினிய குயிலே கேட்டியேல் எங்கள் பெருமான்**
**பாதம் இரண்டும் வினவிற் பாதாளம் ஏழினுக் கப்பால்**
**சோதி மணிமுடி சொல்லிற் சொல்லிறந் துந்நின்ற தொன்மை**
**ஆதி குணம்ஒன்று மில்லான் அந்தமி லான்வரக் கூவாய்.**

**விளக்கம்**: குயிலை, 'நீ இறைவனை அழைத்தற்குத் தகுதியுடையாய்' என்பாள், 'கீதம் இனிய குயிலே' என விளித்தாள் .'வினவில்', 'சொல்லில்' என்றாற்போல வரும் 'செயின்' என்னும் வாய்பாட்டு எச்சங்கள் சொல்லெச்சமாக யாதேனும் ஒரு சொல் வருவித்து முடிக்கப்படுதல் அறிக, 'அப்பால்' என்பதிலும், 'உள்ளன' என்பது சொல்லெச்சமாய் நின்றது .'தொன்மை' என்பது, தொன்மையுடையது' எனப் பொருள் தந்தது ஆகுபெயர்எனவே ., மணிமுடி' என்பதற்கு 'நின்றது' என்பதே முடிபாயிற்று. இப்பாடல்களில் ஒவ்வொர் அடியிலும் உள்ள சீர்கள் இருவகை வெண்டளையும் பெற்று வருவனஆதலின் ., 'சொல்லிறந்துந் நின்ற' என்று கொள்ளப்பட்டது.நகரவொற்று விரித்தல் .

இதனால், இறைவன் பெருமை கூறப்பட்டது.

**1**

**ஏர்தரும் ஏழுல கேத்த எவ்வுரு வுந்தன னுருவாய்**

**ஆர்கலி சூழ்தென் னிலங்கை அழகமர் வண்டோ தரிக்குப்**
**பேரரு ளின்ப மளித்த பெருந்துறை மேய பிரானைச்**
**சீரிய வாயாற் குறிலே தென்பாண்டி நாடனைக் கூவாய்.**

**விளக்கம்** : இறைவனை ஒருவனே எல்லாவுலகமுமாய்க் கலந்து

நிற்கின்றான் ஆதலின், 'எவ்வுரு வுந்தன் னுருவாய்' என்றாள்குயிலுக்கு வாய் சிறப்பு .

டைமையின், 'சீரிய வாயாற் குயிலே' எனப் புகழ்ந்தாள்.

வண்டோதரிக்கு இன்பம அளித்தது :

முன்னொரு நாள் திருவுத்தரகோச மங்கையில் பெருமான் இலந்தை

மரத்தடியில் முனிவர்களுக்கு ஆகமப் பொருளை

அருளிக்கொண்டிருந்தான்அப்போது இலங்கை மன்னனத .

ு மனைவி வண்டோதரி வேண்ட, அவளது பூசைக்கு இரங்கிப்

பெருமான் முனிவர்களையும் விடுத்து, அவளுக்குக் குழந்தை

வடிவத்தில் காட்சியளித்தான்சிவபூசையில் சிறந்தவனாகிய இராவணனும .

குழந்தை வடிவத்தில் கிடந்த ் பெருமானைத் தூக்கி

எடுத்து உச்சி மோந்து பேரானந்தம் கொண்டான்.

இதனால், இறைவனது கருணை கூறப்பட்டது.

**2**

**நீல வுருவிற் குறிலே நீள்மணி மாடம் நிலாவுங்**
**கோல உருவில் திகழுங் கொடிமங்கை உள்ளுறை கோயில்**
**சீலம் பெரிதும் இனிய திருவுத் தரகோச மங்கை**
**ஞாலம் விளங்க இருந்த நாயக னைவரக் கூவாய்.**

**விளக்கம்** : திருவுத்தரகோச மங்கை ஒழுக்கம் மிக்க பெரியோர்களை

உடைமையால், 'சீலம் பெரிதும் இனிய' என்றாள்அங்கு இறைவன் ஆகமப்பொருளை (

கு உ்

பதேசித்தமையால், 'ஞாலம் விளங்க இருந்த நாயகன்' என்றாள்.

இதனால், இறைவன் விளக்கம் தருபவன் என்பது கூறப்பட்டது.

**3**

**தேன்பழச் சோலை பயிலுஞ் சிறுகுயி லேயிது கேள்நீ
வான்பழித் திம்மண் புகுந்து மனிதரை ஆட்கொண்ட வள்ளல்
ஊன்பழித் துள்ளம் புகுந்தென் உணர்வது வாய வொருத்தன்
மான்பழித் தாண்டமென் ணோக்கி மணாளனை நீவரக் கூவாய்.**

**விளக்கம்** : அருளை வாரி வழங்குபவனாதலின், 'வள்ளல்' என்றும்,

அவ்வண்ணம் ஆட்கொள்வார் வேறொருவர் இல்லையாதலின், 'ஒருத்தன்'

என்றும், தேவியோடு தோன்றியே ஆட்கொள்வானாதலின், 'மணாளன்'

என்றும் பெருமானது இயல்பினை வரிசைப்படுத்திக் கூறினாள்.

மான் பழித்து ஆண்ட' என்பது, தேவியினது நோக்கத்தின்

கவர்ச்சியும் அருளும் இனிமையும் கூறியபடியாம்.

இதனால், இறைவனது இயல்பு கூறப்பட்டது.

**4**

**சுந்தரத் தின்பக் குயிலே சூழ்சுடர் ஞாயிறு போல
அந்தரத் தேநின் றிழிந்திங் கடியவ ராசை அறுப்பான்
முந்தும் நடுவும் முடிவு மாகிய மூவ ரறியாச்
சிந்துரச் சேவடி யாணைச் சேவக னைவரக் கூவாய்.**

.

**விளக்கம்** : 'சுந்தரத்து' என்றதில் உள்ளது 'அத்து' சாரியைஅடிகளை ஆட்கொள்ள வந் .

த பொழுதுஇறைவன

ிருமேனி பேரொ

ளியுடையதாய் இருந்தமையால், 'சூழ்சுடர் ஞாயிறு போல, என்றார்.

'முந்தும் நடுவும் முடிவும்' என்றது, படைத்துக் காத்து அழித்தலாகிய

முத்தொழிலைக் குறித்ததுகுணமூர்த்திகளாகிய பிரம விட்டுணுக்களோடு ஒருவனாய்

ற்கும் உருத்திரனும் குணமூர்த்தியேயாதலால், நிர்க்குணனாகிய சிவபிரான்

அம்மூவராலும் அறியப்படாதவன் என்பார், 'மூவரறியாச் சிந்துரச் சேவடியான்' என்றார்

இதனால், இறைவன் மும்மூர்த்திகளுக்கும் மேற்பட்டவன் என்பது கூறப்பட்டது.

**5**

**இன்பந் தருவன் குயிலே ஏழுல கும்முழு தாளி**
**அன்பன் அமுதளித் தூறும் ஆனந்தன் வான்வந்த தேவன்**
**நன்பொன் மணிச்சுவ டொத்த நற்பரி மேல்வரு வானைக்**
**கொம்பின் மிழற்றுங் குயிலே கோகழி நாதனைக் கூவாய்.**

விளக்கம்: குயிலுக்கு இன்பம் செய்தலாவது, பழம் முதலியவற்றைத் தருதல்.

சித்தத்தே தித்திக்கும் தேனாதலின், 'அமுதளித்து ஊறும் ஆனந்தன்' என்றாள்.

'பொன் மணிச்சுவடு ஒத்த நற்பரி' என்பது, பொன்னிறத்தில் சிவப்புப்

புள்ளிகளையுடைய குதிரை என்பதாம்.

இதனால், இறைவன் ஆனந்த வடிவாய் இருப்பான் என்பது கூறப்பட்டது.

6

**உன்னை உகப்பன் குயிலே உன்துணைத் தோழியும் ஆவன்**
**பொன்னை அழித்தநன் மேனிப் புகழின் திகழும் அழகன்**
**மன்னன் பரிமிசை வந்த வள்ளல் பெருந்துறை மேய**
**தென்னவன் சேரலன் சோழன் சீர்ப்புயங் கள்வரக் கூவாய்.**

விளக்கம்: 'உன்னை உகப்பன் உன்துணைத் தோழியும் ஆவன்' என்றது

, தலைவியின் ஆற்றாமையைக் காட்டியபடி. காண்பதற்கு இனிமையானது

அழகு; கேட்பதற்கு இனிமையானது புகழ்; இரண்டையும் உடையவன்

பெருமானாதலின், 'புகழின் திகழும் அழகன்' என்றாள். 'தென்னவன் சேரலன்

சோழன்' என்றது மூவேந்தருமாய் இருந்து உலகத்தை ஆள்பவன் என்பதாம்.

இதனால், இறைவன் உலகத்தை ஆள்பவன் என்பது கூறப்பட்டது.

7

**வாவிங்கே நீகுயிற் பிள்ளாய் மாலொடு நான்முகன் தேடி**
**ஓவி யவருன்னி நிற்ப ஒண்தழல் விண்பிளந் தோங்கி**
**மேவியன் றண்டங் கடந்து விரிசுட ராய்நின்ற மெய்யன்**
**தாவி வரும்பரிப் பாகன் தாழ்சடை யோன்வரக் கூவாய்.**

விளக்கம்: ஒள் தழலாகப் பெருமான் தோன்றிய இடம் திருவண்ணாமலை

என்பது முன்னே கூறப்பட்டதுசுடர் என .

றது தழலினின்றும தோன்றுவது ஆதலின்ஃ, தழலாய் ஓங்கிச்

சுடராய் நின்றான் என்றாள் .'சுடர் விட்டுளன் எங்கள் சோதி' என்றார் திருஞானசம்பந்

இதனால், இறைவன் திருமேனி அனற்பிழம்பானது என்பது கூறப்பட்டது.

**8**

**காருடைப் பொன்திகழ் மேனிக் கடிபொழில் வாழுங் குயிலே**
**சீருடைச் செங்கம லத்தின் திகழுரு வாகிய செல்வன்**
**பாரிடைப் பாதங்கள் காட்டிப் பாசம் அறுத்தெனை யாண்ட**
**ஆருடை அம்பொனின் மேனி அமுதினை நீவரக் கூவாய்.**

**விளக்கம்**: பொன் திகழ் மேனி என்றது, பொன் போலும் அழகுடையது

என்ற பொருளில் வந்ததுசெல்வன் என்றது அருட்செல்வத்தையுட .

பாசம் அறுத்த .ையவன் என்றபடி ஆண்டது திருப்பெருந்துறையில்

என்க.ஆத்தி மாலை பெருமானுடைய அடையாள மாலை .

இதனால், இறைவன் அருளாகிய செல்வத்தையுடையவன் என்பது கூறப்பட்டது.

**9**

**கொந்தண வும்பொழிற் சோலைக் கூங்குயி லேயிது கேள்நீ**
**அந்தண னாகிவந் திங்கே அழகிய சேவடி காட்டி**
**எந்தம ராமிவ னென்றிங் கென்னையும் ஆட்கொண் டருளும்**
**செந்தழல் போல்திரு மேனித் தேவர் பிரான்வரக் கூவாய்.**

.

**விளக்கம்**: பொழில் ஆம் பொருள் .பெரிய சோலை -, போம் பொருள்

என்பன போல, 'கூம் குயில்' என வந்தது .'எம்' என்றது, இறைவனைப்

பன்மையாகக் கூறியதாம் தழல் துய்மை செய்யும் .இயல்பையுடையது

ஆதலின், மாசு நீக்கம் விரும்புவாள், 'செந்தழல் போல் திருமேனித் தேவர் பிரான்' என்

இதனால், இறைவனது கருணை கூறப்பட்டது.